மாண்புமிகு திரு. க. கலைமணி: (அ) மற்றும் (ஆ): தஞ்சை மாவட்டம் கோடிக் கரையில் ஒரு மீன்பிடி இறங்கு துறைமுகம் 1982 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது, 1982 ஆம் ஆண்டு இறங்கு துறைமுகம் உபயோகத்திற்குக் கொண்டு வரப்பட்ட போது படகுகள் தங்குவதற்குப் போதுமான ஆழம் இருந்தது. நாளடைவில் படிப்படியாக கடல் கரையை விட்டு வெகுதூரம் தள்ளிச் சென்று விட்டது. எனவே இத்தங்கு துறையினை மீன் பிடி படகுகள் ஆழக் குறைவினால் பயன்படுத்த இயலவில்லை. எனினும் இத்தங்கு துறையை மீண்டும் உபயோகத்திற்குக் கொண்டுவர இதனை 110 மீட்டர் நீளப்படுத்தலாம் என்று மேற்பார்வைப் பொறியாளர் கருத்து தெரிவித்துள்ளார். இக் கருத்தினை தற்போது மீனளத்துறை தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

குலசேகரப்பட்டணத்தில் சிறிய மீன்பிடித் துறைமுகம் ஏற்படுத்தும் திட்டம்.

348—(*வினா எண் 22334) திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தொகுதி குலசேகரப்பட்டணத்தில் சிறிய மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. கலைமணி: (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 13 ஆம் தேதியன்று, கடற்கரையோரங்களிலே இருக்கும் பகுதிகளில் தண்ணீர் புகுந்ததே அந்த நிலைமைகளை நான் பார்வை இடச்சென்ற நேரத்திலே, வானத்திலேயிருந்து பெரும் வெளிச்சத்தோடு கடலிலே குண்டு போல ஒன்று விழுந்தது. அது விழுந்தவுடன் பெருமளவு சத்தத்தோடு வெடித்தது. என்னவென்றே தெரியவில்லை. 10 மைல் சுற்றளவுக்கு அந்தச் சத்தம் கேட்டது.